இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 211 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 28 – புதன்கிழமை 12 மார்ச் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 211 : Thiruvalluvar Year - 2056 - Maasi 28 - Wednesday 12 March 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் முதலீடுகள் வந்து குவிகிறது!

# உலகத் தொழில் நிறுவனங்களுக்கு முதல் முகவரி தமிழ்நாடு!

## கோத்ரேஜ் நிறுவன உற்பத்தி ஆலையைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.3.2025) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், குன்னப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 515 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கோத்ரெஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, மார்ச் 12-**

**செங்கல்பட்டு மாவட்டத்தில் உலகத்தரம் வாய்ந்த கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் உற்பத்தி ஆலையை நேற்று முன்தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில், "தமிழ்நாட்டில் முதலீடுகள் வந்து குவிந்து கொண்டிருக்கிறது" என்றும் "உலகத் தொழில் நிறுவனங்களுக்கு முதல் முகவரி தமிழ்நாடு" என்றும் பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.3.2025) செங்கல்பட்டு மாவட்டத்தில், 515 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்டஸ் நிறுவனத்தின் உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை தொடங்கிவைத்து ஆற்றிய உரை வருமாறு:-

கோத்ரெஜ் நிறுவனத்தின் நுகர்வோர் பொருட்கள் உற்பத்திக்கான அதிநவீன ஆலையை துவக்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!

வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாட்டிற்கு வந்திருக்கக்கூடிய கோத்ரெஜ் நுகர்வோர் பொருட்கள் நிறுவனத்தின் செயல் தலைவர் நிசாபா கோத்ரெஜ் அவர்கள் மற்றும் அவருடன் வந்திருக்கக்கூடிய அனைவரையும் நான் அன்புடன் வருக! வருக! என்று வரவேற்கிறேன்.

இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் நிறுவியதில் உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியோ அதைவிட இரண்டு மடங்கு எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்குக் காரணம், தமிழ்நாட்டில் உங்களின் தொழில் நிறுவனத்தை நிறுவுவது, தமிழ்நாட்டின் மேல் நீங்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

உலக நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு தான் முதல் முகவரி என்று நீங்கள் வெளிப்படையாக அறிவித்தது, மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாடு அரசுக்கும், கோத்ரேஜ் நிறுவனத்திற்கும் இது ஒரு வெற்றிகரமான நிகழ்வு!

515 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள இந்த நிறுவனம், 1,010 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளதாக தெரிவித்திருக்கிறீர்கள். ஆயிரம் குடும்பங்களை வாழ்விக்க இருக்கிறீர்கள் என்று நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்! இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு, பெருமையும் அடைகிறேன்!

### ஒரே ஆண்டில் துவக்குவது பெருமையாக இருக்கிறது!

கோத்ரெஜ் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) போட்டோம். அடுத்த ஐந்தே மாதத்தில் அதாவது, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது அடிக்கல் நாட்டப்பட்டது. இப்போது, அடிக்கல் நாட்டிய ஒரே ஆண்டில் துவக்கி வைக்கக்கூடிய நிகழ்ச்சியை பார்க்கும்போது எனக்கு பெருமையாக இருக்காதா…! இல்லையா! அதனால்தான் பெருமையாக இருக்கிறது என்று சொன்னேன். புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, ஒரு திட்டம் செயலாக்கம் பெறுவது வரைக்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு, எப்படி கவனமாகவும், பொறுப்போடும் செயல்படுகிறது என்பதற்கு இந்த நிறுவனம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது!

> **"இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, உலகளாவிய பெருநிறுவனங்களுக்கும் தமிழ்நாடு தான் முதல் முகவரி! இந்தியாவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்ள சிறந்த மாநிலம், தமிழ்நாடுதான்!"**

வீடு மற்றும் தனிநபர் பராமரிப்பு சார்ந்த பொருட்களின் உற்பத்தியில் சிறந்து விளங்கக்கூடிய கோத்ரெஜ் குழுமத்திற்கு பல்லாண்டு பாரம்பரியமும் - பல இலட்சம் நுகர்வோரின் ஆதரவும் இருக்கிறது! தமிழ்நாட்டில் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய வகையில், அதிநவீன உற்பத்தித் திட்டத்தை நீங்கள் நிறுவியுள்ளதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்!

### முக்கியச் சந்தையாக தமிழ்நாடு இருக்கிறது!

தமிழ்நாட்டில் நுகர்வோர் பொருட்களின் சந்தை, மிகப்பெரிய வளர்ச்சி வாய்ப்புகளை கொண்டிருக்கிறது. இந்தத் துறை மிகவும் ஆற்றல் மிக்கது, போட்டித்தன்மை கொண்டது. இனி வருங்காலங்களில், மேலும் இந்த நிலை அதிகரிக்கும். மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று என்பதால், தமிழ்நாடு பெரும்பாலான நிறுவனங்களுக்கு முக்கியமான சந்தையாக இருந்து வருகிறது.

பிரிட்டானியா, டாபர், ITC நிறுவனங்கள் மற்றும் உங்களின் நிறுவனமும் சேர்த்து, பல FMCG நிறுவனங்களின் உற்பத்தித் திட்டங்கள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறை மேலும் வளர்ச்சி பெற தமிழ்நாட்டில் வாய்ப்புகள் ஏராளமாக இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சியில், தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்…!

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, உலகளாவிய பெருநிறுவனங்களுக்கும்தமிழ்நாடுதான்முதல் முகவரி! இந்தியாவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே முதலீடுகள்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

---

### ஆணவத்துடன் பேசும்

## ஒன்றியக் கல்வி அமைச்சருக்கு நாவடக்கம் தேவை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மார்ச் 12-

தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமாகவும் ஆணவமாகவும் பேசும் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் தேவை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் கண்டனம் தெரிவித்து குறிப்பிட்டுள்ளதாவது:-

**தன்னை மன்னரென எண்ணிக் கொண்டு ஆணவத்துடன் பேசும் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு நாவடக்கம் வேண்டும்!**

**தமிழ்நாட்டின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள் தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமானவர்கள் என்பதா?**

**தமிழ்நாட்டு மக்களை அவமானப் படுத்துகிறீர்கள். பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இதனை ஏற்கிறாரா?**

**NEP, மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு அனுப்பிய PM SHRI MoU முற்றிலுமாக நிராகரித்து விட்டது என எனக்குக் கடிதம் எழுதியது நீங்கள் தானே?**

**பிரதான் அவர்களே, நாங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம்! உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல!**

**நாங்கள் உங்கள் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவும் இல்லை, அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது.**

**தமிழ்நாட்டு மாணவர்களுக்குரிய நிதியை, எங்களிடம் இருந்து வசூல் செய்த வரியை விடுவிக்க முடியுமா முடியாதா என்பதற்கு மட்டும் பதில் கூறுங்கள்!**

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## தமிழர்களை - தமிழக எம்.பி.க்களை அநாகரிகமானவர்கள் என்பதா?

### மக்களவையில் ஒன்றிய அமைச்சருக்கு கனிமொழி கருணாநிதி கடும் கண்டனம்!

**புதுடெல்லி, மார்ச் 12-**

**"தமிழக அரசை, தமிழக எம்.பி.க்களை, தமிழக மக்களை நாகரிகமற்றவர்கள் என்ற எனது அந்த வார்த்தைகளை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்." என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மக்களவையில் தெரிவித்தார்.**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. மக்களவை கூடிய சிறிது நேரத்தில், தென் சென்னை தி.மு.க. எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன், தேசிய கல்விக் கொள்கை மற்றும் பிஎம் ஸ்ரீ திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதில் அளித்தார். அப்போது, "பிஎம் ஸ்ரீ திட்டத்தை ஏற்பதாக தமிழக அரசு ஒப்புக் கொண்டு பிறகு யு டர்ன் அடித்துவிட்டது. தமிழக அரசை பொறுத்தவரை, அவர்கள் தமிழக மாணவர்கள் விஷயத்தில் பொறுப்பாக இல்லை; நேர்மையாக இல்லை; ஜனநாயக முறைப்படி செயல்படவில்லை; அவர்கள் நல்ல நாகரிகத்தில் இல்லை. அவர்கள் உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். தற்போது



மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும்படி செயல்படுகிறார்கள். மொழியை வைத்துக் கொண்டு அவர்கள் விளையாடுகிறார்கள். அவர்கள் மாணவர்களுக்கு அநீதி இழைக்கிறார்கள். மாணவர்களின் எதிர்காலத்தை பாழாக்குகிறார்கள். என கடுமையாக குற்றம் சாட்டி இருந்தார்.

அமைச்சரின் இந்த பேச்சுக்கு தி.மு.க. எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அவையின் மையப்பகுதிக்கு வந்து அமளியில் ஈடுபட்டனர். சிறிது நேரத்துக்குப் பிறகு அவை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடியது. அப்போது. அமைச்சரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. எம்.பி., கனிமொழி பேசினார்.

அவர் தனது உரையில், "இன்று நான் வலியோடு இருக்கிறேன்." அமைச்சரின் பதில் வலியையும், வேதனையையும் ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக அரசு, தமிழக எம்பிக்கள், தமிழக மக்கள் நாகரிகமற்றவர்கள் என அமைச்சர் கூறி இருக்கிறார்.

நாங்கள் எஸ்எஸ்ஐ நிதி தொடர்பாக அமைச்சரை சந்தித்தோம். தமிழக அமைச்சரும் எங்களோடு இருந்தார். தேசிய கல்விக் கௌள்கையில் எங்களுக்கு பிரச்சினை இருக்கிறது. அதை முழுவதுமாக எங்களால் ஏற்க முடியாது. ஏனெனில், மும்மொழிக் கொள்கை தமிழக அரசால் ஏற்க முடியாது.

தமிழக முதல்வர், அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதி இருக்கிறார். தேசிய கல்விக் கொள்கையை முழுவதுமாக எங்களால் ஏற்க முடியாது. நிதியை எங்களுக்கு ஒதுக்குங்கள் என முதல்வர் கோரிக்கை விடுத்திருந்தார். தமிழக எம்பிக்கள் ஒருபோதும் மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை. என தெரிவித்தார்.

கனிமொழியின் உரைக்கு பதில் அளிக்கும் விதமாக பேசிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், "எனது மதிப்புமிக்க நாடாளுமன்ற உறுப்பினர், எனது நெருங்கிய சகோதரி கனிமொழி 2 விஷயங்களை எழுப்பி இருக்கிறார். தமிழக அரசை, தமிழக எம்.பி.க்களை, தமிழக மக்களை நாகரிகமற்றவர்கள் என நான் கூறினேன் என கனிமொழி கூறினார். நான் எனது அந்த வார்த்தைகளை திரும்ப பெற்றுக்கொள்கிறேன். இரண்டாவதாக, பி.எம். ஸ்ரீ திட்டம் தொடர்பாக அவர்கள் என்னோடு பல முறை பேசி இருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் அவர்கள் பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஒப்புக்கொண்டார்கள். தமிழக முதல்வரும் ஒப்புக்கொண்டார். பிறகு அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார்கள். தற்போதும் சொல்கிறேன். இந்தநிதி ஆண்டு முடிய இன்னும் 20 நாட்கள் இருக்கின்றன. பா.ஜ.க. அல்லாத மாநிலங்களோடு எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. கர்நாடகா, பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் என அனைத்து மாநிலங்களும் பி.எம். ஸ்ரீ திட்டத்தின் கீழ் நிதியை பெற்று வருகிறார்கள். தமிழ்நாடும் பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஏற்பதாக ஒப்புக்கொண்டால், அவர்களுக்கும் நிதி வழங்கப்படும்" என தெரிவித்தார்.

---

### தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி வழங்காததைக் கண்டித்து

## மக்களவையில் கழக எம்.பி.க்கள் தொடர் முழக்கம்!

### அவை ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, மார்ச் 12-*

*தி.மு.க. எம்.பி.க்களின் தொடர் முழக்கத்தால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு தொடங்கியது. தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி மறுக்கப்பட்டது தொடர்பாக தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார். புதிய கல்விக் கொள்கையை பின்பற்றாததால் ஒன்றிய அரசு பழி வாங்குகிறது. தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நிதியை தராமல் வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு. ஒன்றிய அரசின் கொள்கையை ஏற்கவில்லை என்பதற்காக நிதி விடுவிக்காததை ஏற்க முடியாது. இது பழிவாங்கும் நடவடிக்கை.*

*சட்டத்துக்கு புறம்பாக தமிழ்நாட்டை வஞ்சிப்பதா? புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் கல்வி நிதியை மறுப்பதா? தமிழ்நாட்டுக்கான கல்விநிதி ரூ.2000 கோடியை ஒன்றிய அரசு உடனே வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.*

*இதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்; புதிய கல்விக் கொள்கை மூலம் ஹிந்தி திணிக்கப்படுகிறது என்பது தவறானது. பா.ஜ.க. ஆளாத மாநிலங்கள் கூட புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன. பிஎம்ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த ஒப்புக்கொண்ட தமிழ்நாடு பின்னர் பின்வாங்கி விட்டதாக ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டினார்.*

*ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சுக்கு திமுக, கூட்டணி கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சைக் கண்டித்து மக்களவையில் திமுக எம்.பி.க்கள் தொடர் முழக்கம் எழுப்பினர். நாடாளுமன்றத்தில் தர்மேந்திர பிரதானை முற்றுகையிட்டு தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது. தி.மு.க.வுக்கு ஆதரவாக அவைத் தலைவர் இருக்கை முன்பு கூடி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர். தி.மு.க. எம்.பி.க் களின் தொடர் முழக்கத்தால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.*